அமைக்கப்பட்டு அது செயல்பட்டு வருகிறது. அதேநேரத்திலே, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை வேண்டும் என்ற முறையிலேதான் தமிழக அரசின் சார்பில் நெல்லுக்கு ஊக்கத் தொகை குவிண்டாலுக்கு 1,050 ரூபாய் வரையிலும் வழங்கப்படுகிறது. ஆனால், விலை நிர்ணயிக்கிற மத்திய அரசாங்கமோ நெல்லுக்கான விலையை உயர்த்தி வழங்கவில்லை. இப்பொழுது அறிவிக்கப்பட்ட மத்திய பட்ஜெட்டிலேகூட கோதுமைக்கு மட்டுமே விலை உயர்வை அறிவித்திருக்கிறார்கள். நெல்லுக்கு உரிய விலையை மத்திய அரசாங்கம் அறிவிக்கவில்லை என்பதை நமது மாநில அரசாங்கம் வலியுறுத்தி, நெல்லுக்கான விலை உயர்வைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ளவிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்பில் ஒரு குவிண்டால் கோதுமைக்கு தருகின்ற விலையை நெல்லுக்கும் தரவேண்டும் என்ற கேள்வி, நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய கேள்வி. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிடக் கூடுதலாக ஊக்கத் தொகையாக மாநில அரசு அளித்து வருகிறது. அதனால்தான் ஊக்கத் தொகை என்ற அடிப்படையில் ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,050/-ஐ இப்போது நாம் தந்துகொண்டிருக்கிறோம். மேலும், மத்திய அரசாங்கம் விலையைக் கூட்டித் தரவேண்டும் என்று இந்த அரசாங்கம் கேட்டுக்கொண்டு இருக்கிறது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

53—

பணிமனை

***61736—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS

2009 பிப்ரவரி 24]

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மீனாட்சிபுரம் பணிமனையை நவீனப்படுத்தி சொகுசு மற்றும் குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகளுக்கு கூண்டு கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், நாகர்கோவிலில் உள்ள மீனாட்சிபுரம் பணிமனையை நவீனப்படுத்தி சொகுசு மற்றும் குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகளுக்கு கூண்டு கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனாட்சிபுரம் மற்றும் இராணித் தோட்டம் பணிமனைகள், ஒரு காலத்தில் தமிழகத்தில் உள்ள பிற மாவட்டங்களுக்கும், ஏன் பிற மாநிலங்களுக்குக்கூட கூண்டு கட்டிக் கொடுத்து, பெரிய அளவில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. அத்தகைய பழமையும், பெருமையும், திறமையும் உடைய அந்த பணிமனையை, மீண்டும் நவீனப்படுத்தி அரசுப் பேருந்துகளுக்கான கூண்டுகளை கட்ட முடியும். இப்போது அரசு U.D. பேருந்துகளுக்காக சுமார் 9 இலட்சம் ரூபாய் தனியார் நிறுவனங்களிடம் கொடுத்து கூண்டு கட்டக்கூடிய பணியிலே ஈடுபட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் வேலைவாய்ப்பில் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இந்தப் பணிகள் அந்த பணிமனையில் நிறுத்தப்பட்டதன்மூலமாக, இருந்த வேலைவாய்ப்புகூட பறிபோய் இருக்கிறது. திறமையான தொழிலாளர்கள் இருக்கிறார்கள், விஞ்ஞானம் பல நவீனமான தொழில்நுட்பங்களைத் தந்திருக்கிறது. தனியார்வசம் இருக்கக்கூடிய அந்த தொழில்நுட்பங்களை அரசுத் தரப்பிலும் கொண்டுவந்து, அரசுப் பேருந்துகளுக்கான கூண்டுகளை இத்தகைய பணிமனைகளில் செய்தால் நிச்சயமாக தனியாருக்குக் கொடுப்பதைவிடவும் குறைந்த செலவில் கூண்டுகளைக் கட்ட முடியும்; வேலைவாய்ப்புகளையும் பெருக்க முடியும். ஆகவே இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[2009 பிப்ரவரி 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற 7 போக்குவரத்து மண்டலங்களில் மொத்தம் 21 இடங்களிலே கூண்டு கட்டுகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டுகூட நம்முடைய அரசுக்குச் சொந்தமான கூண்டு கட்டும் பிரிவில் கிட்டத்தட்ட 900 வண்டிகளுக்கு மேலாக கூண்டு கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது மொத்தம் 20,000 பேருந்துகள் இருக்கின்றன. ஆண்டுதோறும் 3,000 பேருந்துகள் என்று வாங்கி அதை மாற்றுகின்றபோது அரசு கூண்டு கட்டும் பிரிவிலேயே அந்தக் கூண்டு கட்டி பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால், 2 ஆண்டு காலம் ஆகும். ஓர் ஆண்டு வாங்குகின்ற பேருந்துகளை இரண்டாண்டு காலம் கட்டிமுடித்தால்தான் அவற்றைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும். உதாரணமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த இடத்திலே 3 வண்டிகளை நிறுத்தி கட்டக்கூடிய வசதிதான் இருக்கிறது. எனவே, மக்கள் பயன்பாட்டிற்கு உடனே வரவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் அரசிலே எவ்வளவு கூண்டு கட்டமுடியுமோ அதை மட்டும் வைத்துக்கொண்டு, மீதம் இருப்பதை மட்டும் வெளியிலே கொடுத்து கூண்டு கட்டுகின்ற பணி இருக்கிறது. இந்த இரண்டாண்டு காலமும் மார்ச் மாதம் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கி 6 மாத காலத்திற்குள்ளாக அத்தனை பேருந்துகளையும் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறோம். நேரடியாக மக்களின் பயன்பாட்டிற்கு அந்த வண்டிகள் வந்திருக்கின்றன. கடந்த காலங்களிலே ஓர் ஆண்டிற்கு 500, 600 பேருந்துகள் என்று வாங்கியபோது தொடர்ந்து கழகங்களிலேயே ஆண்டு முழுவதும் கூண்டு கட்டி வந்தபோது மக்களின் பயன்பாட்டிற்கு வருவதற்கு தாமதம் ஆனது. அதனால்தான் வெளியிலே கொடுத்து கூண்டு கட்டி உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுகூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தில் ஏற்கெனவே விபத்துக்குள்ளான பேருந்துகள், பழைய பேருந்துகளையெல்லாம் மாற்றி கட்டுகின்ற பணி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அங்கிருக்கின்ற ஊழியர்களுக்கு தொடர்ந்து அந்தப் பணி வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2009 பிப்ரவரி 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனாட்சிபுரம் பணிமனையில் 3 கூண்டுகளைக் கட்டுவதற்கான வாய்ப்புதான் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். ஆனால், அந்தப் பணிமனை தொடங்கப்பட்டு கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஆகின்றன. 30 ஆண்டு காலமாகவே இந்த 3 பேருந்துகள் கட்டும் வழிதான் இருக்கிறது. காலத்திற்கேற்றாற்போல, தேவைக்கேற்றாற்போல, அதிக எண்ணிக்கையில் கூண்டுகளைக் கட்டுவதற்குரிய வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. தொழிலாளர்களின் எண்ணிக்கைகூட கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, வசதிகளையும் உயர்த்தினால், தேவைக்கேற்ற எண்ணிக்கையில் அரசுத் தரப்பிலேயே கூண்டுகளைக் கட்ட முடியும். அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சமீபத்தில் தமிழக அரசால் வாங்கி ஓட்டப்படும் அந்தப் புதிய பேருந்துகளில். . .

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கேள்வியை சீக்கிரம் கேளுங்கள். கேள்வியே ஒன்றரை மணி நேரம் கேட்கிறீர்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: கேள்விதான் கேட்கிறேன். சில பேருந்துகளில் இருக்கைகள் நெருக்கமாகப் போடப்பட்டிருக்கின்ற காரணத்தினால் காலைநீட்டி உட்கார முடியாத நிலை பயணிகளுக்கு ஏற்படுகிறது. குறிப்பாக நாகர்கோவில்-திருவனந்தபுரம் செல்லக்கூடிய பேருந்துகளில் இந்தச் சிரமங்கள் இருக்கின்றன. தாழ்தளப் பேருந்துகளிலும், U.D. பேருந்துகளிலும் அத்தகைய பிரச்சினைகள் இல்லை. மற்ற பேருந்துகளில் இருக்கின்றன. அதைச் சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், சில தொலை தூரப் பேருந்துகளில் மூட்டைப் பூச்சிகளின் தொல்லை இருப்பதாக பயணிகள் குறை கூறுகிறார்கள். நான்கூட சமீபத்தில் மார்த்தாண்டத்திலிருந்து கோயம்புத்தூருக்கும், திரும்பவும் அரசுப் பேருந்துகளில் பயணித்திருக்கிறேன். அனுபவரீதியாக அதை அனுபவித்திருக்கிறேன். ஆகவே, காலத்தே மூட்டைப் பூச்சி மருந்துகளைத் தெளித்து சுத்தம் செய்து சரி செய்வதுடன் நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் கேட்டுக்கொண்டதன்...

[2009 பிப்ரவரி 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலத்தின் அருமை கருதி, உங்கள் கேள்வியை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: ஒரு நொடியில் முடித்துக்கொள்கிறேன். நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் மார்த்தாண்டம்-ஈரோடு பேருந்து வழித்தடம் அவர்களால் அனுமதிக்கப்பட்டு பேருந்து இயக்கி வைக்கப்பட்டது. அந்தப் பேருந்து சமீபத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என் நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள உள் கட்டமைப்பிலே 3 வண்டிகளை மட்டும் நிறுத்தி வைத்து வேலை செய்யக்கூடிய அளவுக்குத்தான் 30 ஆண்டு காலமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, போக்குவரத்துக்கழகத்தினுடைய முக்கிய நோக்கம், கூண்டு கட்டுவதோ, அதைச் சரி செய்வதோ அல்ல. எங்கள் துறையின் முக்கிய நோக்கம், மக்களை ஏற்றிக் கொண்டு அவர்கள் சொல்லுகின்ற இடத்தில் இறக்குவதுதான் அதிலேதான் முதலிலே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அதை நிறைவு செய்த பிறகு வேண்டுமானால் மற்ற infrastructure கூண்டு கட்டுகின்ற பணி, அதை ரிப்பேர் செய்கின்ற பணியைச் செய்ய முடியும். எனவே, அதைப்பற்றி தேவை வருகின்றபோது அரசு ஆலோசிக்கும்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில் ஒரு இடத்தை வாங்கி அதை விரிவுபடுத்துவது எவ்வளவு பெரிய சிரமம் என்று அவருக்கே தெரியும். இருக்கின்ற இடத்திலே அதை விரிவுபடுத்துவதுகூட கூடுதலாக செலவாகக்கூடியது. அதைப்பற்றி நிச்சயமாக வருகின்ற காலத்தில் ஆலோசித்து செய்யப்படும். அவர் நிறுத்தப்பட்டிருக்கின்ற பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். வெளிப்படையாகப் பார்த்தால், மற்றப் போக்குவரத்துக் கழகங்களைக் காட்டிலும் கன்னியாகுமரியில் இருக்கின்ற போக்குவரத்துக் கழகத்தில், ஒரு பேருந்துக்கு சராசரியாக நாளொன்றுக்கு 3,000-லிருந்து 4,000 ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகின்றது. கிட்டத்தட்ட 900 பேருந்துகளை அங்கே இயக்கிக் கொண்டிருக்கிறோம். மிகவும் குறுகிய இடம், குறுகிய தூரத்திலே செல்லுகின்ற காரணத்தால் வசூல் என்று வருகின்றபோது

2009 பிப்ரவரி 24]

சராசரியாக ஒரு பேருந்துக்கு ரூபாய் 4,000-க்கு மேல் வருவது இல்லை. ஆனால் ஒரு பேருந்துக்கு முழுமையாக வரவு-செலவு சரியாக இருக்க வேண்டுமென்று சொன்னால், 7,500 ரூபாய் இருந்தால்தான் ஒரு நாள் செலவுக்கு சரியாக இருக்கும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் வண்டி கொட, கொட என்று இருப்பதாகச் சொல்கிறார். இவர், நிறுத்திய பேருந்தை விட வேண்டுமென்று சொல்கிறார். எவ்வளவு நஷ்டம் வந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர், பயணிகளுடைய நலனைக் கருத்திலே கொண்டு, பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பேருந்து நாளையிலிருந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

மருத்துவமனைக் கட்டடம்

***891—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.95 இலட்சம் செலவில் புதிய கட்டடப் பிரிவுகள் கட்டப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.